பக்கங்கள் 19+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 30 திங்கட்கிழமை 14.07.2025 | அதிர்வு 338

## முன் பிணை கோரி ராஜித இன்று மனு



இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வெடிப்புக் காயங்களால் சாவடைந்தோரே கொக்குத்தொடுவாய் புதைகுழியில் மீட்பு!

### பகுப்பாய்வில் கண்டறிவு

* 21 ஆண்கள், 31 பெண்களின் எலும்புக்கூடுகள் அடையாளம்
* பெரும்பாலானவர்கள் 13 முதல் 30 வயதுடையவர்கள்

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட 52 மனித என்புத்தொகுதிகளில், உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இளவயதினர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்கள் வெடிப்புக் காயங்களால் உயிரிழந்துள்ளமையும், துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளமையும் பகுப்பாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. 04

### வடக்கு மாகாணத்தில்

# படை வசமுள்ள காணிகளின் உரிமையாளர்கள் கொழும்பில் நாளை கவனவீர்ப்புப் போராட்டம்



(ந.லோகதயாளன்)

வடக்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

யாழ். வலிகாமம் வடக்கின் காணி உரிமையாளர்களுடன் வடக்கு மாகாணத்தில் படையினர் வசம் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் போராட்டத்தை முன்னெடுக்க இன்று கொழும்புக்குப் பயணிக்கின்றனர்.

மன்னாரில் செயற்படும் ஒரு தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்புக்குப் பயணிக்கும் அவர்கள், தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி நாளை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அதேவேளை, வடக்கில் படையினர் வசமுள்ள காணிகளின் உரிமையாளர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியாவில் வீதியோர வியாபார நிலையங்கள் மாநகர சபையால் இன்று அதிரடியாக அகற்றல்!

## வியாபாரிகள் கடும் எதிர்ப்பு; பொலிஸார் குவிப்பு




**(கி.வசந்தன்)**

வவுனியா மாநகர சபையால் இலுப்பையடி வீதியோர வியாபார நிலையங்கள் அகற்றப்பட்ட போது அந்தப் பகுதியில் வீதியோர வியாபாரிகளுக்கும் மாநகர சபையினருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் அமைந்திருந்த வீதியோர கடைகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கை வவுனியா மாநகர சபையால் இன்று முன்னெடுக்கப்பட்டது.

அந்த இடத்தில் இருந்து வேறு மாற்று இடத்துக்குச் சென்று வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஏற்கனவே மாநகர சபையால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அகற்றப்படாத வர்த்தக நிலையங்களை அகற்றும் நடவடிக்கையை மாநகர சபை இன்று முன்னெடுத்தது. இதன்போது வீதியோர வர்த்தக நிலைய உரிமையாளர்களால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் வர்த்தகர்களுக்கும் மாநகர சபை உறுப்பினர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து அவ்விடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டதுடன், வீதியோரமாக இருந்த வர்த்தக நிலையங்களும் முழுமையாக அகற்றப்பட்டன. பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டனர்.











# அநுர அரசை விரைவில் வீட்டுக்கு அனுப்புவோம்

## ராஜிதவின் மகன் சத்துர சபதம்

பழிவாங்கும் அநுர அரசை நாங்கள் விரைவில் வீட்டுக்கு அனுப்பியே தீருவோம் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்வின் மகனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சத்துர சேனாரத்ன தெரிவித்தார்.

ஊழல், மோசடிக் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தான் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக முன் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ள நிலையிலேயே



அவரது மகன் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் இன்று அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் நிச்சயமாக இந்த அரசை வீழ்த்துவோம். எனது தந்தை கைது செய்யப்படுகின்றாரோ, இல்லையோ இந்த அரசு வீழும் என்பது உறுதி. பழிவாங்கும் அநுர அரசை நாங்கள் விரைவில் வீட்டுக்கு அனுப்பியே தீருவோம்." – என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

### தங்க முலாம் பூசப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி விவகாரம்:

# முன்னாள் அமைச்சர் துமிந்தவுக்கு கடும் நிபந்தனைகளுடன் பிணை!



கொழும்பு – வெள்ளவத்தையில் உள்ள ஒரு சொகுசு அடுக்குமாடி குடியிருப்பில் தங்க முலாம் பூசப்பட்ட ரி – 56 ரக துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவுக்குக் கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை துமிந்த திஸாநாயக்க கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்படி, துமிந்த திஸாநாயக்கவை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 50 இலட்சம் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்ன உத்தரவிட்டார்.

சரீரப் பிணை வழங்கும் இரண்டு நபர்களும் கொழும்புப் பகுதியில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும் எனவும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

மேலதிகமாக, சந்தேகநபருக்குப் பயணத் தடை விதித்த நீதிமன்றம், அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்க மாறும் உத்தரவிட்டது.

சந்தேகநபருக்குப் பிணை வழங்குவதற்குச் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கடும் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பை வழங்கும் போது, சந்தேக நபர் துப்பாக்கி வைத்திருந்தது இன்னும் வெளிப்படுத்தப்படாததால் நீதிமன்றம் பிணை வழங்கத் தீர்மானித்துள்ளது என்று அறிவித்தார்.

கடந்த மே மாதம் 23 ஆம் திகதி பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளின் பின்னர் முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மே மாதம் 20 ஆம் திகதி கொழும்பு – வெள்ளவத்தையில் உள்ள ஒரு சொ-குசு அடுக்குமாடி குடியிருப்பில் பெண்ணின் பயணப் பையில் கண்டுபிடிக்கப்பட்ட தங்கமுலாம் பூசப்பட்ட ரி – 56 ரக துப்பாக்கி தொடர்பில் துமிந்த திஸாநாயக்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரசன்னவுக்கு விளக்கமறியல் மேலும் நீடிப்பு



முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிர சன்னரணவீரவைஎதிர்வரும்28ஆம்திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கு மாறு மஹர நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ள பிரசன்ன ரணவீர இன்று நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் போலி ஆவ ணங்களைத் தயாரித்து கிரிபத் கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர் பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவைக் கைது செய்யு மாறு நீதிமன்றத்தால் பிடியாணை பிறப் பிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அவர் பிரதேசத்தை விட் டுத் தப்பிச் சென்று நீண்ட காலமாகத் தலைமறைவாக இருந்தார்.

பின்னர், அவர் கடந்த மே மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் சரணடைந்த தையடுத்து விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### முன் பிணை...

அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முன் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வும் திட்டத்தை கொரிய நிறுவனத்துக்கு ஒப்படைத்து அர சாங்கத்திற்கு 2.63 மில்லியன் ரூபா வுக்கும் அதிகமாக நட்டத்தை ஏற்படுத் தினார் எனக் கூறப்படும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனுவெல கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்துத் தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனா ரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட முன் பிணை மனுவைப் பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி, இந்த வழக்கு தொடர்பான சான்றுகளை எதிர்வரும் 18 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கு மாறு இலஞ்சம் மற்றும் ஊழல் விசா ரணை ஆணைக்குழுவுக்கு அறிவித் துள்ளார்.

### வெடிப்புக் காயங்களால்...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி கடந்த ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி அடையாளம் காணப்பட் டது.

குழாய் நீர் பொருத்தும் நடவடிக் கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது முல்லைத் தீவு - கொக்குத்தொடுவாய் பிரதான வீதியோரத்தில் இந்த மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக அகழ்வு நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்ட மருத்துவ அதிகாரி கே.வாசுதேவா மற்றும் யாழ்ப்பாணம் சட்ட மருத்துவ அதி காரி செ.பிரணவன் ஆகியோரின் கண் காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களு டன், தொல்லியல்துறைப் பேராசிரி யர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கையில் 52 மனித என்புத் தொகுதிகள் அங்கிருந்து மீட்கப்பட் டன.

அத்துடன் ஆடைகள், துப்பாக்கி ரவை கள் உட்பட வேறு தடயப்பொருள்களும் மீட்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புத் தொகுதிகளின் பகுப்பாய்வு அறிக்கையில் இறந்தவர்கள் ஏன் இறந்தார்கள்? என்ன காரணத்தால் இறந்தார்கள்? அவர்களின் வயது எத் தனை? போன்ற விவரங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளில் 31 பெண்களுடையவை என்றும், 21 ஆண் களுடையவை என்றும் கண்டறியப் பட்டுள்ளது.

இறந்தவர்களின் வயது எல்லை 12 முதல் 53 வயது வரை உள்ளது. அதே நேரம் பெரும்பாலானவர்கள் 13 முதல் 30 வயதுடையவர்கள் என்று கணிக் கப்பட்டுள்ளது. 32 பேரின் உயிரிழப்புக்கு வெடிப்புச் சம்பவம் அல்லது வெடிப்புக் காயம் காரணமாகவுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக் காயத்தால் 7 பேர் உயிரிழந்துள்ளனர். வெடிப்புச் சம்பவம் மற்றும் துப்பாக்கிச்சூடு காரணமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

பெரும்பாலான உயிரிழப்புகள் வெடிப்புக் காயங்களால் ஏற்பட்டுள்ளன என்பது பகுப்பாய்வில் கண்டறியப்பட் டுள்ளது.

# மேயர் அதாவுல்லாவின் பங்கேற்புடன் அக்கரைப்பற்றில் 'கிளீன் ஸ்ரீலங்கா'







(அஸ்லம் எஸ்.மௌலானா)

அரசின் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்கரை பிரதேசங்கள் துப்பரவு செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவின் ஆலோசனையின் பேரில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஸட்.ஏ.எம். பைசாலின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் இந்த வேலைத்திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுமார் 2.5 கிலோமீற்றர் அளவிலான கடற்கரைப் பகுதிகள் துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக கடற்கரைப் பிரதேசங்களை பேணிப் பாதுகாப்பது தொடர்பிலான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் அக்கரைப்பற்று மாநகர மேயர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையில் இடம்பெற்றது.

இதில் அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர், பிரதி மேயர் உட்பட உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.



## யாழ். மாநகர பிரதி மேயரின் கோரிக்கைக்கு அமைய

# ஐந்து புல்வெட்டும் இயந்திரங்களை இன்று வழங்கியது வசந்தம் பாமசி!









யாழ்ப்பாணம் வசந்தம் பாமசி உரிமையாளர் லிங்கநாதன் அகிலனிடம் யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் இம்மானுவல் தயாளன் விடுத்த கோரிக்கைக்கு அமைவான, உடனடியாக ஐந்து புல்வெட்டும் இயந்திரங்கள் இன்று (14) வழங்கப்பட்டுள்ளன.

இன்று யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு வருகைதந்த வசந்தம் பாமசி உரிமையாளர் லிங்கநாதன் அகிலன் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா, பிரதி மேயர் இம்மானுவல் தயாளன் ஆகியோரிடம் இந்த இயந்திரங்களைக் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் இம்மானுவல் தயாளன் மற்றும் உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

இவற்றை யாழ். மாநகர சபை ஆணையாளர் ச. கிருஷ்ணேந்திரனிடம், மேயர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா, பிரதி மேயர் இம்மானுவல் தயாளன் ஆகியோர் கையளித்தனர்.

## யாழில் சிறுமி துஷ்பிரயோகம்: புலம்பெயர் நாட்டவர் கைது!



புலம்பெயர் நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து 14 வயதுடைய சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆலயத்துக்குச் சென்ற சிறுமியுடன் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டமை தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமி பெற்றோருடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மேற்படி நபரைக் கைது செய்து விசாரணைகளுக்குப் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

சந்தேகநபரை எதிர்வரும்14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



## முதியோர் இல்லத்தில் குளவி கொட்டி ஏழு பேர் வைத்தியசாலையில் அனுமதி

பதுளை – ஹாலிஎல பிரதேசத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 7 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முதியோர் இல்லத்துக்கு அருகில் இருந்த குளவிக் கூடு ஒன்று கலைந்ததால் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

இதன்போது முதியோர் இல்லத்தில் இருந்த 7 முதியவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ள நிலையில் அம்புலன்ஸ் சேவை ஊடாக பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குளவிக் கொட்டுக்கு இலக்காகிய முதியவர்களின் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது தேசியப் பண்பியல்பு!

மனித நாகரீகத்துக்கே பொருத்தம் இல்லாத - காட்டுமிராண்டித்தனமான - மிக மோசமான - மிகக் கீழ்த்தரமான - ஒரு பண்பியல்பு நம் சமூகத்தில் நிலவுகின்றது என்றால், அதில் முதலாவது கற்றறிந்தவர்களை நிறைய கொண்டுள்ளவை எனக் கூறப்படும் பல்கலைக் கழகங்களில் நடக்கும் 'றாகிங்' சித்திர வதைக் கொடூரம்தான்.

தமிழ் மாணவன் வரப்பிரகாஷிலிருந்து அண்மையில் சப்ரகமுவாப் பல்கலைக் கழக பட்டதாரி மாணவனின் துயர மரணம் வரை இந்த றாகிங் கொடூரம் பலரின் உயிர்களை குடித்துள்ளது. பலரின் கல்வியை நாசமாக்கி உள்ளது. ஒரு பெரும் சமூகச் சீரழிவாக இலங்கையை நாசப்படுத்தி உள்ளது. ஆனால் அதை கட்டுப்படுத்துவதில் ஒரு நாடாக இலங்கை பெரும் தோல்வி கண்டு வந்திருக்கின்றது என்பதே அது பல்கலைக்கழகங்கள் தோறும் விஸ்வரூபம் எடுத்துத் தொடரும் நிலைமை நமக்கு உணர்த்தி நிற்கின்றது.

ஒரு மோசமான - மிகக் கொடூரமான - மிகக் குரூரமான - மிகக் கீழ்த்தரமான - மிருகத்தனமான - மிகக் கேவலமான - ஒரு குற்றவியல் நடத்தைப் பண்பியல்பை இந்த நாட்டின் இயல்பான தேசியப் பழக்கவழக்கமாக மாற்றும் பல்கலைக்கழகப் போக்கு இலங்கை சமூகத்துக்கே ஒரு கரும்புள்ளி.

இது விடயத்தில் சமூகம் காட்டும் சகிப்புத்தன்மை, அதன் கீழ்த்தரமான நடத்தைக்கு ஓர் எடுத்துக்காட்டு. இது விடயத்தில் பூஜ்ஜிய சகிப்புத்தன்மையை காட்டுகின்ற நேர்மையான சமூகமாக இலங்கை மக்களும் அவர்களின் சமுதாயமும் இல்லை என்பது நாட்டிற்குப் பெரும் அவமானமாகும்.

றாகிங் சித்திரவதைக் கொடூரத்தை ஒரு தடை செய்யப்பட்ட விவகாரமாக - குற்றவியல் நடத்தையாக - அறிவித்து, 1998 ஆம் ஆண்டு சட்டத்தின் மூலமே அரசாங்கம் அதனைத் தடை செய்து விட்டது. ஆனாலும் அந்தச் சட்டம் வெறுமனே கருப்பு, வெள்ளை தாளில் இருக்கின்றதே தவிர, நடைமுறையில் இல்லை.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு றாகிங் சம்பவம் தொடர்பாக அண்மையில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கிழித்துத் தொங்க விட்டிருக்கின்றது.

அரசாங்கத்தின் பிரதான மூன்று கட்டமைப்புகளில் ஒன்று - நிறைவேற்ற அதிகாரம். அடுத்தது - சட்டவாக்கல் அதிகாரம. மூன்றாவது - நீதித்துறை. இதிலேயே, நீதித்துறை தவிர, மற்ற இரண்டும் றாகிங் விடயத்திலே பாராமுகமாகவும் பொறுப்பின்றியும் செயல்படுவதான குற்றச்சாட்டு பலதரப்புகளினாலும் முன்வைக்கப்படுகின்றது. உயர்நீதிமன்ற தீர்ப்பும் அதை உறுதிப்படுத்தி உள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் சம்பள பட்டியலில் உள்ள அதிகாரிகள் தொடக்கம் பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் வரை இந்த விடயத்தில் பொறுப்பின்றி செயல்படுகின்றனர் என்ற கருத்து நிலைப்பாட்டையே உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பிரதிபலித்துள்ளது. அதுவே மக்களினதும் அவதானிகளினதும் கருத்தாகவும் இருந்து வருகின்றது.

ஒரு பெரும் குற்றவியல் நடத்தையை சமூகத்தின் இயல்பான பண்பியல்பாக மாற்றும் சகிப்புத்தன்மை இந்த சமுதாயத்தை உயரியதாக மாற்ற இடம் அளிக்க மாட்டாது என்பதுதான் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டும் தீர்ப்பு ஊடாக வெளிப்பட்டுள்ளது.

றாகிங் கொடூரத்தைத் தடுப்பதாயின் அது தொடர்பான சட்டங்கள் இறுக்கமாக இருக்க வேண்டும். அளவுக்கு அதிகமாக அனுதாபம் காட்டுவது, விடயங்களை சமாளித்து பூசி மெழுகுவது, குற்றம் புரிந்தால் தண்டனையின்றித் தப்பலாம் என்று நம்பிக்கையை குற்றம் இழைக்கும் மாணவர்களுக்கு வழங்குவது போன்ற சில விடயங்கள்தான் றாகிங் என்ற கொடூரம் சமூகத்தில் இருந்து நீக்க முடியாத அங்கமாக தொடர்வதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களில் கல்வி பெரும்பாலும் அரசாங்க உதவித் திட்டமாக வழங்கப்படுகின்றது. மக்களின் வரிப் பணத்தில் இருந்து முன்னெடுக்கப்படும் அந்த வசதி, வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அதையே தங்களுடைய குற்றவியல் செயற்பாட்டுக்கான தளமாகப் பயன்படுத்துவதை நாடு தொடர்ந்தும் சகித்துக் கொண்டிருக்க போகின்றதா?

தொடர்ந்தும் றாகிங் நீடிக்குமானால், அது இலங்கை சமுதாயத்தின் தேசிய பண்பியல்பாக மாறிவிடும் என்பதை பொறுப்புள்ள ஒவ்வொரு பிரஜையும் கவனத்தில் எடுத்து, அதற்கு எதிராகத் தனது பிரதிபலிப்பை காட்டமாக காட்ட முன்வர வேண்டும்.

# நித்தகைக்குளம் சீரமைப்பு வேலைகளை நேரில் பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி.!

## குளத்தின் கீழான வயல் நிலங்களை வன இலாகா உடனடியாக மக்களிடம் கையளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்து





**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – குமுழமுனை கமநல சேவை நிலையப் பிரிவுக்கு உட்பட்ட ஆண்டான் குளம் பகுதியில் அமைந்துள்ள நித்தகைக் குளத்தின் சீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த சீரமைப்பு வேலைகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று (13) நேரடியாகச் சென்று பார்வையிட்டார். அத்துடன் அங்கு விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட பொங்கல் வழிபாடுகளிலும் பங்கேற்றிருந்தார்.

இந்த நிலையில் இவ்வாறு நித்தகைக் குளத்தின் சீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குறித்த குளத்தின் கீழான வயல் நிலங்களை வனவளத் திணைக்களம் ஏற்கனவே உடன்பட்டதைப்போன்று உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறிப்பாக ஆண்டான்குளம் நித்தகைக் குளத்தின் கீழ் தமிழ் மக்கள் பூர்வீகமாக விவசாயம் செய்து வந்த நிலையில், கடந்த காலத்தில் இடம் பெற்ற போர்ச் சூழல் காரணமாக கடந்த 40 வருடங்களாக குறித்த நித்தகைக்குளத்தின் கீழ் தமிழ் மக்களால் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் குறித்த நித்தகைக் குளம் மற்றும், குளத்தின் கீழான வயல் நிலங்கள் என்பவற்றை வனவளத் திணைக்களம் ஆக்கிரமிப்புச் செய்திருந்தது.

இத்தகைய சூழலில் அப்பகுதி விவசாயிகள் மற்றும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோருடைய தொடர்ச்சியான வலியுறுத்தலை அடுத்துக் குறித்த குளம் வனவளத்திணைக்களத்தால் விடுவிக்கப்பட்டதுடன், குளத்தின் கீழான வயல் நிலங்களும் வனவளத் திணைக்களத்தால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அந்தவகையில் தற்போது நித்தகைக் குளத்தின் சீரமைப்பு வேலைகளுக்கென நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு, குளத்தின் சீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அப்பகுதி விவசாயிகளின் அழைப்பை ஏற்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த குளத்தின் சீரமைப்பு வேலைகளைப் பார்வையிட்டதுடன், அங்கு விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட பூசை வழிபாடுகளிலும் பங்கேற்றார்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

தொடர்ச்சியாக நாம் இந்தப் பகுதி விவசாயிகளுடன் சேர்ந்து உரியதரப்பினரை வலியுறுத்திவந்த நிலையில் குறித்த பகுதி ஏற்கனவே விடுவிக்கப்பட்டதுடன், தற்போது இந்த குளத்தைச் சீரமைப்பதற்கான வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே இந்தக் குளத்தின் கீழ் எமது விவசாயிகள் நாற்பது ஆண்டுகளுக்கு பிற்பாடு விவசாயம் செய்யக் கூடிய நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

அதேவேளை இந்தக் குளத்தின் கீழான எமது மக்களுக்கு உரித்தான 1500 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்கள் காணப்படுகின்றன.

நீண்டகாலம் விவசாயம் செய்ய முடியாத நிலை காணப்பட்டதால் குறித்த வயல் நிலங்கள் காடுகளாகக் காட்சியளிக்கின்றன. இந்த நிலையில் குறித்த வயல் நிலங்கள் தமக்கு உரிய பகுதியென வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்து வைத்துள்ளது.

குறித்த வயல் காணிகளை விடுவிக்குமாறு வனவளத் திணைக்களத்தை தொடர்ந்து வலியுறுத்தியதற்கு அமைய மக்களுக்கு உரிய குறித்த குளத்தின் கீழான வயல் காணிகளை விடுவிப்பதற்கு வனவளத் திணைக்களமும் இணக்கம் தெரித்தது.

இருப்பினும் குறித்த வயல்காணிகள் உத்தியோக பூர்வமாக தம்மிடம் கையளிக்கப்படவில்லை என மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர். இந்தவிடயத்தில் ஏற்கனவே வனவளத் திணைக்களம் இணங்கிக்கொண்டதற்கிணங்க மக்களின் வயல் காணிகளை உடனடியாக மக்களிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் ஒதியமலைக் கிராமத்தில், கருவேப்பமுறிப்பு குளம் சீரமைக்கப்பட்டுள்ள போதும் அதன் கீழ் உள்ள விவசாயக் காணிகளை வனவளத் திணைக்களம் விடுவிப்புச் செய்யாமல் இழுத்தடிப்புச் செய்கின்ற நிலமைகள் காணப்படுகின்றன.

இதேபோலதான் துணுக்காய், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று என அனைத்துப் பிரதேசங்களிலும் வனவளத் திணைக்களத்தின் செயற்பாடுகள் மிக மோசமாகக் காணப்படுகின்றன.

அந்த செயற்பாடுகள் போலல்லாது, இந்த குளத்தின் கீழுள்ள எமது மக்களுடைய 1500 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாயக் காணிகளை வனவளத் திணைக்களம் ஏற்கனவே இணங்கியதற்கு அமைய உடனடியாக மக்களிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.– என்றார்.

# அபகரிக்கப்பட்ட திரியாய் ஆத்திக்காடு காணிகளை பார்வையிட்டார் ஆசிய மனித உரிமைத் தலைவர்!



(எஸ்.கீதபொன்கலன்)

ஆசிய நாடுகளுக்கான மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் டோம் வெல், திருகோணமலை மாவட்டத்தின் அபகரிக்கப்பட்டுள்ள திரியாய் ஆத்திக் காடு காணிகளைப் நேற்று (13) நேரில் சென்று பார்வையிட்டார்.

ஆசிய நாடுகளுக்கான மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் டோம் வெல், திரியாய் ஆத்திக் காடு மற்றும் வளத்தாமலையில் உள்ள அபகரிப்பிற்குள்ளாகியுள்ள காணிகளை பார்வையிட்டதுடன் குறித்த நில அபகரிப்பு தொடர்பான பிரச்சனைகளையும் பொது மக்களிடம் கேட்டறிந்தார்.

இந்த சந்திப்பின் போது, திரியாய் ஆத்திக்காடு, வளத்தாமலை ஆலய பிணக்கு மற்றும் பௌத்த மத பிக்குவால் சிறுபான்மை மக்களின் நிலங்கள் தொடர்ந்து அபகரிப்புள்ளாக்கப்பட்டு வருகின்றமை குறித்தும், இவ்விடயங்களை வெளிப்படுத்தி வரும் சமூக செயற்பாட்டாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் விவசாய நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளமையால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள கையறு நிலை தொடர்பாகவும் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் கே.டனுஜனால் மனித உரிமைக்குழுத் தலைவருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இவ்வருடம் இடம்பெறவிருக்கும் ஜெனீவா மாநாட்டில் இந்தப் பிரச்சினைகள் குறித்து தனது உரையில் குறிப்பிடுவேன் என்று டோம் வெல் தமக்கு உறுதி அளித்துள்ளார் என்று குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் கே.டனுஜன் சந்திப்பின் பின்னர் கூறினார்.

# கறுப்பு ஜூலை தமிழின அழிப்பின் 42ஆவது ஆண்டு நினைவேந்தல்!



ஸ்ரீலங்கா அரசால் தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட தமிழினஅழிப்பான கறுப்பு ஜூலை இனப் படுகொலையின் 42 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பிரான்சின் பொண்டி நகரில், நகர சபையால் நிறுவப்பட்ட கறுப்பு ஜூலை இனவழிப்பு நினைவுக்கல் அமைந்துள்ள இடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரைப் பொண்டி நகரின் நகரபிதா ஸ்டீபன் ஏர்வே ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கப்படன் சூரியத்தேவனின் சகோதரரால் நினைவுக் கல்லுக்கான மலர் வணக்கம் செய்யப்படது. மக்களும் மலர் வணக்கம் செலுத்தினர்.

இந்த நிகழ்வில் பொண்டி நகரின் நகர முதல்வர், பிரதி முதல்வர்கள், நகர சபை உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.





# யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதித் திட்ட மீளாய்வு!

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவால் கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், அந்தத் திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

திட்ட முன்னேற்ற மீளாய்வை இரு வாரங்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளுமாறும், இவற்றுக்குப் பொறுப்பாக பதவி நிலை அலுவலர் ஒருவரை நியமிக்குமாறும் யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு, ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர் ஆர்.குருபரன், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) செ.பிரணவநாதன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு ஆகியோருடன் யாழ். பொதுநூலகத்தின் பிரதான நூலகர், மத்திய கட்டடங்கள் திணைக்களப் பொறியியலாளர், மாநகர சபையின் பொறியியலாளர், நூலகம் நிறுவனத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.











# வல்வெட்டித்துறையில் இரத்ததானம்!

வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம், வல்வெட்டித்துறை பிரதேச அரசினர் வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நெடியகாடு கணபதி திருமண மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

80 ஆவது அமுதவிழாவை முன்னிட்டு இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் 15 பெண்கள் 59 ஆண்கள் என 74 குருதிக் கொடை வழங்குநர்கள் குருதிக் கொடை வழங்கினர்.

அவர்களுக்கு ஏற்பாட்டாளர்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

நிகழ்வில் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் திருமதி தவமலர் கலந்து கொண்டார்.



# காரைதீவு ஹொக்கி அணி கிழக்கு மாகாண சம்பியன்!

## ஏழாவது வருட தொடர் சாதனை!!



( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண ஹொக்கி அணிகளுக்கு இடையிலான போட்டியில் அம்பாறை மாவட்ட அணியான காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிவாகை சூடி கிழக்கு மாகாண சாம்பியனாகத் தெரிவாகியுள்ளது.

இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக ஏழு தடவைகள் மாகாண சம்பியனாக காரைதீவு ஹொக்கி லயன்ஸ் அணி தெரிவாகியுள்ளது.

இந்த மாகாண மட்டப் போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை அம்பாறை பொது மைதானத்தில் நடைபெற்றது.

முதல் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியும் திருகோணமலை மாவட்ட அணியும் மோதின. அதில் திருகோணமலை அணி வெற்றி பெற்றது.

நடப்பு வருட சாம்பியனான அம்பாறை மாவட்ட அணி நேரடியாக இறுதி போட்டிக்கு தகுதி பெற்றிருந்தது.

இறுதிப் போட்டியில் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்ட அணிகள் மோதியதில் அம்பாறை மாவட்ட அணி 1-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி வாகை சூடியது.

அம்பாறை மாவட்ட அணியைக் காரைதீவு பிரதேச செயலக பிரிவு கொக்கி லயன்ஸ் அணியினர் பிரதிநிதி படுத்தி கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

# வெலம்பொட முஸ்லிம் வித்திக்கு விஜயம் செய்த ரவூப் ஹக்கீம்!

**(கே. எ. ஹமீட் )**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் வெலம்பொட முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

இதன்போது பாடசாலையின் எதிர் கால நடவடிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாகவும் தெரிவித்தார் என்று பாடசாலையின் அதிபர் எம்.பைறூஸ் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் உடுநுவர பிரதேச சபையின் உறுப்பினர் முஸ்தஃபீர் ஹாஜியார் மற்றும் பாடசாலை எஸ்.டி.ஈ.சி. உறுப்பினர்களான ஏ.எல்.பைஸல், இம்தியாஸ் ஹாஜியார், ஏ.எஸ்.கியாஸ் சேர், ராபிஸரீப்டீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





## உலக சாதனையை நோக்காகக் கொண்டு

# மட்டுவில் திருச்செல்வம் மற்றுமொரு சாதனை!




பல்வேறு சாதனைகளைப் புரிந்து வரும் மட்டுவிலைச் சேர்ந்த செல்லையா திருச்செல்வம் (வயது - 61) என்பவர் நேற்று மட்டுவிலில் புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

இவர் தனது சொந்த ஊரான மட்டுவில் சந்திரபுரத்தில் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இவர் தனது இரு காதுகளையும் பயன்படுத்தி 2 ஆயிரத்து 50 கிலோ எடை கொண்ட பிக்கப் ரக வாகனத்தை 50 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் சாதனை புரிந்துள்ளார்.

உலக சாதனையை நிகழ்த்துவதற்காக அவர் இந்த சாதனையை நேற்று நிகழ்த்தினார்.

அத்துடன் அவர் தனது தாடியால் அதே வாகனத்தை 50 மீற்றர் தூரத்துக்கு இழுத்து மீண்டும் ஒரு சாதனை படைத்துள்ளார்.







# தீவகப் பிரதேசத்துக்கு முக்கியத்துவமளித்து மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்போம்

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவிப்பு

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பதவியே எனது முதல் நியமனம். தீவக மக்கள் எதிர்கொள்ளும் இடர்கள் தொடர்பில் எனக்குத் தெரியும். இந்தப் பிரதேசத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து உங்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு இயன்றவரையில் முயற்சி செய்வேன் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

திரு. திருமதி சிவப்பிரகாசம் வாசன் ஜெசிந்தா தம்பதியரின் திட்ட உருவாகத்தில், புலம்பெயர் தேசத்தில் வாழும் நயினாதீவு உறவுகள் மற்றும் ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்க வாறன்டோர்ப் கிளையின் நிதிப் பங்களிப்பில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றின் அனுசரணையுடன் இலங்கை கடற்படையின் கட்டுமானத்தில் அமையப்பெற்ற நயினாதீவு பிரதேச மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கட்டடம் 66 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் என்பன நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை, சுகாதாரத் திணைக்களம், நலன்விரும்பிகளால் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சர்நளிந்தஜயதிஸ்ஸ,கடற்றொழில்அமைச்சர் இ.சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.சிறீபவானந்தராஜா, வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் திருமதி ப.ஜெயராணி, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன்பத்திரன, யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், ஊர்காவற்றுறை மற்றும் வேலணை சுகாதார மருத்துவ அதிகாரிகள், கடற்படையினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

ஆளுநர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மக்களுடைய பங்களிப்பும் ஒத்துழைப்பும் இருந்தால் எந்தவொரு அபிவிருத்தியையும் எப்படி வெற்றிகரமாக செய்து முடிக்க முடியும் என்பதற்கு இந்த மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் சிறந்த எடுத்துக்காட்டு.

கடற்படையினர் இந்தக் கட்டடத்தைச் சிறப்பான முறையில் கட்டி முடித்து ஒப்படைத்துள்ளனர். 1991 ஆம் ஆண்டில் இருந்து கடற்படையினருடன் பணியாற்றியிருக்கின்றேன். அவர்களால் இந்தப் பிரதேசங்களிலுள்ள துறைமுகங்கள் உள்ளிட்ட பல்வேறு புனரமைப்பு அபிவிருத்திப் பணிகள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

ஜனாதிபதி அநுரகுமார, உலக வங்கியினரை வடக்கு – கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கப் பணித்துள்ளார். அவர்களும் இந்தப் பகுதிகளை வந்து பார்வையிட்டுச் சென்றிருக்கின்றனர். பெரும்பாலும் அடுத்த ஆண்டு அந்த அபிவிருத்திப் பணிகள் ஆரம்பமாகும் என நினைக்கின்றேன். அவர்களால் தீவகப் பகுதிகளிலுள்ள சில இறங்குதுறைகள் புனரமைக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன். அதனூடாக இந்தப் பகுதியின் சுற்றுலாத்துறை மேம்படும்.– என்றார்.









# மாவடிவேம்பு சித்திவிநாயகர் ஆலயத்தில் மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வுகள்!

**(பழுவூரான்)**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆலோசனை, வழி காட்டலில் சிவதொண்டர் திருக்கூட் டத்தின் ஏற்பாட்டில் மாவடிவேம்பு சித்தி விநாயகர் ஆலயம், காளிகா அறநெறிப் பாடசாலை, நடராஜர் சைவ சித்தாந்தப் பயிற்சி மையம் மற்றும் உலக சிவன டியார்கள் திருக்கூட்டம் ஆகியன இணைந்து மாணிக்கவாசகர் குருபூசை யைச் சித்திவிநாயகர் ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (13) நடத்தின.

இதன் ஆரம்ப நிகழ்வாக ஆன்மீக ஊழுச்சி ஊர்வலம் நடைபெற்று, அத னைத் தொடர்ந்து மாணிக்கவாசகர் குருபூசை நடைபெற்றது.

மாவடிவேம்பு சித்திவிநாயகர் ஆலய தலைவர் ஜெயபால் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் சைவப்புலவர் திருமதி ஞா.சிவானந்தஜோதி, சிவ தொண்டர் திருக்கூட்டத்தின் தலைவர் சிவதொண்டர் கே.கமல்ராஜ், மாவட்ட இணைப்பாளர்களான சிவதொண்டர் எஸ். சுதர்சன், சிவதொண்டர் எஸ்.ஜெயபாலன், மட்டக்களப்பு ஆதீனத்தின் நிறுவுனர் எஸ்.ஜெயபால் செந்தமிழ் ஆகம செஞ்சுனைஞர் ஆர்.பிரபாகரன் ஐயா மற்றும் காளிகா அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையினர்கள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.













# பழம்பெரும் நடிகை சரோஜாதேவி மறைவு

பழம்பெரும் நடிகர் சரோஜா தேவி (வயது87) உடல்நலக்குறைவால் இன்று காலையில் பெங்களூரில் உள்ள மருத்துவமனையில் காலமானார்.

மூச்சுத்திணறல் காரணமாக பெங்களூர் கொலம்பியா ஏசியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சரோஜா தேவி இன்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது மறைவுக்கு ரசிகர்கள் மற்றும் திரையுலகினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

சரோஜாதேவி கன்னடம், தமிழ், தெலுங்கு மொழித் திரைப்படங்களில் நடித்து முன்னணி நடிகராக வலம் வந்தவர். இவர் ஐம்பதாண்டு காலமாக திரைப்படத் துறையில் உலாவந்து, 200 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். ரசிகர்களால் 'கன்னடத்துப் பைங்கிளி', 'அபிநய சரசுவதி' போன்ற அடைமொழிகளால் அழைக்கப்படுகிறார். இவர் பல திரைப்பட விருதுகளையும், இந்திய அரசின் பத்மபூஷன், பத்மஸ்ரீ விருதுகளையும் வென்றுள்ளார். அதேபோல, வாழ்நாள் சாதனையாளர்களுக்கான இந்திய அரசின் தேசிய விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

தமிழ்த் திரையில் 25 ஆண்டுகள் முன்னணி நட்சத்திரமாக ஜொலித்த பி.சரோஜாதேவி சினிமாவில் நுழைந்ததே ஒரு விபத்து என்றுதான் சொல்ல வேண்டும். சரோஜாதேவியின் தந்தை பைரவப்பா பொலிஸ் அதிகாரி. தாய் ருத்ரம்மா குடும்பத் தலைவி. இவர்களுக்கு நான்காவது மகளாகப் பிறந்த சரோஜாதேவி,

ஹொன்னப்ப பாகவதர் கவி காளிதாஸாக நடித்து, தயாரித்த 'மகாகவி காளிதாஸா' என்ற கன்னடப் படத்தில் 1955 ஆம் ஆண்டு அறிமுகமானார் சரோஜாதேவி. படம் மிகப் பெரிய வெற்றி. அதற்குத் தேசிய விருதும் கிடைத்தது.

தமிழில் உடனடியாக நடிக்க முடியாதபடி கன்னடப் படங்கள் அவருக்குக் குவிந்தன. 'இல்லறமே நல்லறம்' என்ற படத்தில் சின்ன வேடத்தில் தமிழில் அறிமுகமானார் சரோஜா தேவி. அதன் பின்னர் 2வது கதாநாயகி வேடங்கள் கிடைக்கத் தொடங்கின.

அதே ஆண்டில் எம்.ஜி.ஆர். சொந்தப்பட நிறுவனம் தொடங்கி இயக்கித் தயாரித்து நடித்த 'நாடோடி மன்னன்' படத்தில் 'ரத்னா'வாக வந்து அலங்கரித்த சரோஜாதேவி, தமிழ் ரசிகர்கள் மனதிலும் ஊடுருவினார்.

எம்.ஜி.ஆருடன் நாடோடி மன்னன் தொடங்கித் திருடாதே, தாய் சொல்லைத் தட்டாதே, படகோட்டி, எங்க வீட்டுப் பிள்ளை, பெற்றால்தான் பிள்ளையா, அன்பே வா உட்பட அவர் நடித்த அத்தனை படங்களும் வெற்றி பெற்றன.

சரோஜாதேவின் தமிழ்த் திரைப் பயணத்தில் மறக்க முடியாத பரிசென்றே கல்யாணப் பரிசு படத்தைக் கூறிவிடலாம். ஸ்ரீதர் இயக்குநராக அறிமுகமான இந்தப் படத்தில் நடித்ததன் மூலமாகவே பெரும் நட்சத்திர அந்தஸ்து பெற்றார் சரோஜாதேவி.

சிவாஜி கணேசனுடன் பாகப்பிரிவினை, பாவமன்னிப்பு, பார்த்தால் பசி தீரும் என்று தொடங்கி 'புதிய பறவை'யாகக் காதலித்து அவரைக் கைது செய்ய வரும் ரகசிய ஏஜெண்டாகப் பிரமாதப்படுத்தினார்.

படப்பிடிப்பில் ஒழுங்கு, காலம் தவறாமை ஆகியவற்றுக்குப் புகழ் பெற்ற சரோஜாதேவி அன்றைய நாயகியரில் அதிக சம்பளம் வாங்கியவர் என்ற பெருமையும் கொண்டவர். சரோஜாதேவி திருமணத்துக்குப் பிறகும் கணவர் பி.கே. ஸ்ரீ ஹர்ஷாவின் அனுமதியுடன் படங்களில் கதாநாயகியாக நடித்தார். திருமணம் செய்துகொண்டால் வாய்ப்புகள் குறைந்துவிடும் என்ற மாயையை முதலில் உடைத்தெறிந்தவர்.

சரோஜா தேவி, எம்ஜிஆருடன் 26 படங்களிலும, சிவாஜி கணேசனுடன் 22 படங்களிலும் ஜோடியாக நடித்துள்ளார்.

சரோஜாதேவி மறைவையொட்டி தமிழக முதல்வர் ஸ்டாலின், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பாமக தலைவர் அன்புமணி, தே.மு.தி.க. தலைவர் பிரேமலதா விஜயகாந்த் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், “தென்னிந்தியத் திரையுலகின் பழம்பெரும் நடிகையான சரோஜா தேவி மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன். நடிகர் திலகம் சிவாஜி கணேசன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், என்.டி.ஆர், ஜெமினி கணேசன் முதலிய உச்ச நட்சத்திரங்களுடன் இணைந்து ரசிகர்களால் இன்றளவும் கொண்டாடப்படும் பல மறக்க முடியாத வெற்றிப் படங்களை அளித்தவர் சரோஜாதேவி.

தமது அழகிய முகபாவங்களாலும் நளினமான நடிப்பாலும் 'அபிநய சரஸ்வதி' எனப் புகழப்பட்டவர். நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும், கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா, உன்னை ஒன்று கேட்பேன், லவ் பேர்ட்ஸ், தொட்டால் பூ மலரும், ராஜாவின் பார்வை ராணியின் பக்கம் என எத்தனையோ இனிய பாடல்களுக்குத் தமது நடிப்பால் பொலிவூட்டி தமிழ் மக்களின் நெஞ்சினில் நீங்கா இடம் பிடித்திருப்பவர் சரோஜாதேவி அம்மையார்.

சுமார் 200 திரைப்படங்களில் நடித்து, இந்தியத் திரையுலகிற்கு ஆற்றிய பங்களிப்புகளுக்காக பத்மஸ்ரீ, பத்மபூஷன், இந்திய அரசின் வாழ்நாள் சாதனையாளர் விருது, தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது என எண்ணற்ற பெருமைகளைப் பெற்றவர். எப்போதும் இனிய முகத்துடனும், கனிவான பேச்சுடனும் காணப்படும் சரோஜாதேவியின் மறைவு எளிதில் ஈடுசெய்ய முடியாதது. அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரைத்துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும், அவரது ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.







# சித்தராமையா மீது ராகுல் அதிருப்தி: கர்நாடக அரசியலில் பெரும் சர்ச்சை

முதல்வர் சித்தராமையா தலைமையில், கர்நாடகாவில் காங்கிரஸ் அரசு 2 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இந்நிலையில், துணை முதல்வர் டி.கே.சிவகுமாரின் ஆதரவாளர்கள் முதல்வர் பதவி கேட்டு போர்க்கொடி தூக்கியுள்ளனர். இதனால் டி.கே.சிவகுமார், சித்தராமையா இடையே பனிப்போர் நீடிக்கிறது.

இந்நிலையில் இருவரும் கடந்த 7 ஆம் திகதி டில்லிக்கு சென்றனர். அப்போது காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தியை தனித்தனியாக சந்திக்க அனுமதி கோரினர். ஆனால் ராகுல் காந்தி சந்திக்க நேரம் ஒதுக்கவில்லை. இதனால் காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை சந்தித்துவிட்டு பெங்களூர் திரும்பினர்.

இந்நிலையில் நேற்று மீண்டும் சித்தராமையாவும், டி.கே.சிவகுமாரும் டில்லிக்கு சென்றனர். இருவரும் ராகுல் காந்தியை சந்திக்க நேரம் கேட்டும், அவர் நேரம் ஒதுக்கவில்லை என கூறப்படுகிறது. இதனால் இருவரும் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ரன்தீப் சுர்ஜேவாலாவை சந்தித்து பேசினர்.

சித்தராமையா, டி.கே.சிவகுமார் இருவரையும் ராகுல் சந்திக்க மறுத்த விவகாரம் காங்கிரஸ் வட்டாரத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

“சித்தராமையாவும், டி.கே.சிவகுமாரும் முதல்வர் பதவிக்காக மோதிக்கொள்வது காங்கிரஸ் ஆட்சிக்கு மக்களிடையே அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது. இதனால் ராகுல் அதிருப்தி அடைந்துள்ளார். எனவே இருவரையும் சந்திக்க நேரம் ஒதுக்க மறுத்துவிட்டார்” என தெரிவித்தனர்.

# தேர்தல் வெற்றிக்கு அயராது பாடுபட வேண்டும்: தி.மு.க. தொண்டர்களுக்கு ஸ்டாலின் அறிவுரை

தேர்தல் வெற்றிக்கு அயராது பாடுபடுமாறு தி.மு.க. தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளார்.

மக்களின் கோரிக்கைகளைக் கேட்பதுபோல, தி.மு.கவினரின் மனக்குரலை அறிந்து கொள்வதற்காக, ‘உடன்பிறப்பே வா’ எனும் தொகுதி வாரியான நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தை ஏற்பாடு செய்வதாக முதல்வரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் கடந்த ஜூன் 13 ஆம் திகதி முதல், சென்னையில் உள்ள தி.மு.க. தலைமையகத்தில் நிர்வாகிகளை நேரடியாக சந்தித்து முதல்வர் கருத்துகளை கேட்டறிந்து வருகிறார். இதுவரை 12 நாள்கள் நடைபெற்றுள்ள கூட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பகுதி, வட்டம், நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகளை சந்தித்து,முதல்வர் கலந்துரையாடியுள்ளார். அப்போது நிர்வாகிகளுக்கு உற்சாகமூட்டி, புத்தகங்கள் வழங்கியதோடு, தொகுதி நிலவரங்கள் குறித்து கேட்டறிந்து வருகிறார்.

குறிப்பாக தொகுதிகளில் ஆட்சியின் மீது ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் ஆகியோரின் ஆதரவு எப்படி உள்ளது. மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் எனக் கேட்டறிகிறார்.



தொழில், விவசாயப் பணிகள், குடும்ப நிலவரங்கள், அவர்களது வேலைகள் குறித்து கேட்டறிந்து அவர்களுக்கு தகுந்த அறிவுரைகளையும் முதல்வர் வழங்குகிறார். இது தொண்டர்களிடையேமகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுமட்டுமின்றி, தொகுதியின் உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து கேட்டறிந்து, உடனடியாக சம்மந்தப்பட்ட அமைச்சர்களை தொடர்பு கொண்டு பல கோரிக்கைகளை முதல்வர் நிறைவேற்றினார். அப்போது, முதல்வருடனான பல பழைய பசுமையான நினைவுகளை நிர்வாகிகள் நினைவுப்படுத்தி மகிழ்ந்தனர்.

கூட்டத்தில் முதல்வர் வழங்கிய அறிவுரை குறித்து கட்சி நிர்வாகிகள் கருத்து தெரிவிக்கையில்,

“ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் உறுப்பினர் சேர்க்கை அதிகப்படுத்த வேண்டும். அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து அனைவரும் அதில் தாமாகவே முன்வந்து இணைத்து கொள்ளும் அளவுக்கு பணியாற்ற வேண்டும். அனைத்துத் தரப்பினருக்கும் அரசு செயல்படுத்தி வரும் சிறப்பான திட்டங்களையும், சாதனைகளையும் அவர்களிடம் எடுத்துச் சொல்லி திமுக அரசின் செயல்பாடுகளை விளக்க வேண்டும்.

பொது மக்களைச் சந்திக்கும்போது, மொழியால் தமிழன், இனத்தால் திராவிடன், நாட்டால் இந்தியன், உலகத்தால் மனிதன் எனும் வழியில் அணுக வேண்டும். தமிழக அரசின் திட்டங்களை பொதுமக்கள் அறியும் வகையில் சிறப்பாக எடுத்துரைக்க வேண்டும். இதில் எந்தவித சுணக்கமுமின்றி விழிப்புடன் பணியாற்ற வேண்டும்.

மக்கள் ஆதரவு பெருகப் பெருக பொறுப்பும், கடமையும் கூடுகிறது. எதிர்பார்ப்பு அதிகம் ஆகிறது. அதைக் காப்பாற்ற அனைவரும் கடினமாக உழைத்தாக வேண்டும். அதிகமாக உழைக்க நான் தயாராக இருக்கிறேன். வளர்ச்சி என்பது என்னால் மட்டும் ஆனதல்ல, தொண்டர்கள் ஒவ்வொருவரின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கையால் ஆனது. வெற்றியை பெற்றுத்தர அனைவரும் அயராது பாடுபட வேண்டும்.” என்றனர்.



# லண்டன் விமான நிலையத்தில் விபத்துக்குள்ளான விமானம்

லண்டன் சவுத்எண்ட் விமான நிலையத்தில் ஒரு விமானம் விபத்துக்குள்ளாகி பற்றி எரிவதாக தகவல் வெளியாகி உள்ளது.

நேற்று பிற்பகல் 12 மீற்றர் நீளம் கொண்ட விமானம் விபத்துக்குள்ளாகி தீப்பிடித்து எரிவதாக எசெக்ஸ் பொலிஸ் தெரிவித்துள்ளது.

விமான நிலையத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் குறிப்பிடுகையில்,

“லண்டன் சவுத்எண்ட் விமான நிலையத்தில் ஒரு பொது விமானம் சம்பந்தப்பட்ட ஒரு கடுமையான சம்பவம் நடந்திருப்பதை நாங்கள் உறுதிப்படுத்த முடியும்.” என்றார்.

விமான நிலையத்தின் வலைத் தளத்தின்படி, நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் புறப்பட திட்டமிடப் பட்ட நான்கு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றி வருவதாகவும், முடிந்தவரை விரைவில் கூடுதல் தகவல்களை வழங்க முடியும் என்றும் விமான நிலையம் தெரிவித்துள்ளது.

விபத்தைத் தொடர்ந்து சவுத்எண்ட் விமான நிலையத்திலிருந்து வரும் அனைத்து விமானங்களும் ரத்து செய்யப்பட்டன

எசெக்ஸ் பொலிஸின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவிக்கையில்,

“சம்பவ இடத்தில் உள்ள அனைத்து அவசர சேவைகளுடனும் நாங்கள் இப்போது பணியாற்றி வருகிறோம், மேலும் அந்தப் பணி பல மணி நேரம் தொடரும்.

இந்தப் பணி தொடரும் வரை, முடிந்தவரை பொதுமக்கள் இந்தப் பகுதியைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.” என்றார்.

இந்த விமானத்தில் பயணித்தவர்கள் தொடர்பில் எந்தவொரு தகவலும் வெளியாகவில்லை.



# தனது வான் எல்லையை மீண்டும் மூடியது ஈரான்

## மத்திய கிழக்கில் மீண்டும் பதற்றம்





ஈரான் தனது வான் எல்லையை மீண்டும் மூடியுள்ளதால் மத்திய கிழக்கில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரான், இன்று காலை முதல் தனது மேற்கு மற்றும் தென்மேற்கு வான் பரப்பை தற்காலிகமாக மூடியதாக அதிகாரப்பூர்வ அறிவித்துள்ளது.

ஈரானின் இந்த நடவடிக்கை காரணமாக பல சர்வதேச விமானங்கள் ஈரான் வான்பரப்பைத் தவிர்த்து பாகிஸ்தான், கட்டார் மற்றும் துருக்கி வழியாக பயணிக்கின்றன.

இதனால் விமான நிலையங்களில் தாமதம் மற்றும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த வாரம், ஈரான் மற்றும் இஸ்ரேலுக்கிடையில் மீண்டும் உளவுத்துறை தாக்குதல், சைபர் தாக்குதல்கள் மற்றும் கடல் ரீதியான பதில்கள் இடம்பெற்றுள்ளன.

ஜூலை 10 அன்று, ஈரானில் உள்ள இராணுவ முகாமில் ஏற்பட்ட படுகாயம் மற்றும் வெடிவிபத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனால், பாதுகாப்பு காரணங்களுக்காக வான்பரப்பை மூடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது என ஈரான் விளக்கம் அளித்துள்ளது.

இந்நிலையில், கடந்த மாதம் ஈரான் ஜனாதிபதி மசூத் பெஸ்கியான், ஈரான் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் முகமது பாகேர், நீதித்துறை தலைவர் மோசெனி எஜெய் உள்ளிட்டோர் கலந்து கொண்ட ஈரான் தேசிய கவுன்சில் கூட்டம் நடந்த கட்டடத்தை குறி வைத்து ஆறு ஏவுகணைகளை இஸ்ரேல் ஏவியது.

உடனடியாக ஆபத்து கால வழியாக அங்கிருந்த அனைவரும் வெளியேறினர். இஸ்ரேல் நடத்திய இந்த தாக்குதலில் ஈரான் ஜனாதிபதி மசூத் பெஸ்கியான் காயம் அடைந்தாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

இஸ்ரேல் தன்னை கொல்ல சதி செய்வதாக மசூத் பெஸ்கியான் ஏற்கனவே குற்றம்சாட்டி இருந்த நிலையில் தற்போது இந்த தகவல் வெளியாகியுள்ளது.



# பேட்ரியாட் வான் பாதுகாப்பு அமைப்புகளை உக்ரைனுக்கு அனுப்பிவைக்கும் அமெரிக்கா

அமெரிக்கா பேட்ரியாட் வான் பாதுகாப்பு அமைப்புகளை உக்ரைனுக்கு அனுப்பும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா இந்த அமைப்புகளை நேட்டோவிற்கு அனுப்பும் என்றும், பின்னர் அவற்றை உக்ரைனுக்கு வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புடின் மீது கடும் அதிருப்தியில் உள்ள அமெரிக்க ஜனாதிபதி ரஷ்ய படைகளை எதிர்த்து போராட உதவும் வகையில் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்க உள்ளதாக அறிவித்துள்ளார்.

எனினும் எத்தனை பேட்ரியாட் வான் பாதுகாப்பு அமைப்புகளை வழங்குவது என அமெரிக்க ஜனாதிபதி அறிவிக்க வில்லை என்றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைனுக்கும் ரஷ்யாவிற்கும் இடையில் போர் நிறுத்த கலந்துரையாடலை நடத்தும் ட்ரம்பின் முயற்சிகளை ரஷ்ய ஜனாதிபதி எதிர்த்ததால் அமெரிக்க ஜனாதிபதி இந்த விடயத்தில் அதிருப்தி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ரஷ்யாவின் தாக்குதலில் பெருமளவான மக்கள் கொல்லப்பட்டதாகவும், உக்ரைனின் தற்காப்பிற்காகக் கூடுதல் ஆயுதங்கள் அனுப்பப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பக்கம் 03

கனடா முரசு

திங்கட்கிழமை 14/07/2025

## மகிழ்ச்சியாக வாழும் கியுபெக் மாகாண மக்கள்

கனடாவின் புகழ்பெற்ற ஆய்வுக் குழுவான லெஜர் நடத்திய புதிய இணைய கருத்துக்கணிப்பில், கியுபெக் மாகாண மக்கள் தான் நாட்டில் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பவர்கள் என்று தெரிய C02



# டொரொண்டோவில் கடும் புயல் எச்சரிக்கை

**டொரொண்டோ நகரத்திற்கு கடும் புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

**மழை, ஆலங்கட்டி மழை மற்றும் மரங்களையும் வாகனங்களையும் பாதிக்கக் கூடிய பலத்த காற்று வீசக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கனடாவின் சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளது.**

மெதுவாக நகரும் மழை மற்றும் இடியுடன் கூடிய மேகங்கள், இவ்வேளையில் கனமழையை கொண்டு வந்திருக்கின்றன.

ஆலங்கட்டி தர மற்றும் பலத்த காற்று வீசுவதற்கும் வாய்ப்பு உள்ளது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் 50 மில்லி மீற்றர் வரை மழைவீழ்ச்சி பெய்யும் எனவும் பெரியளவிலான ஆலங்கட்டி மழை பெய்யும் எனவும் மரங்களை முறித்தெறியக்கூடிய அல்லது வாகனங்களை கவிழ்க்கக்கூடிய அளவிற்கு பலத்த காற்று வீசும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடுமையான இடி மின்னல் தாக்கங்கள் ஏற்படும் எனவும் இவை உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடியவையென்றும்எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இடி முழங்கும் போது உடனே வீடுகளுக்குள் செல்லுமாறும், இடி ஒலிக்கும்போது வெளியில் இருக்க வேண்டாம் எனவும் கனடிய சுற்றாடல் திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.


புயல் காரணமாக திடீரென வெள்ளம் ஏற்படக்கூடும் என்றும் வீதிகளில் பார்வைத்திறன் குறையக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அஜாக்ஸில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள அஜாக்ஸ் நகரில் இடம்பெற்ற வீட்டுத் தீவிபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டர்ஹம் பிராந்திய பொலிஸார் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

இரவு 11 மணியளவில் டாவுன்டன் Taunton வீதி கிழக்கு மற்றும் சேரம் Salem வீதி வடக்கு பகுதியில் உள்ள வீட்டில் ஒரு ஆயுதம் கொண்ட நபர், தனது குடும்ப உறுப்பினர்களை மிரட்டுகின்றார் என ஒரு அழைப்பு 03





# பல மாகாணங்களில் வார இறுதியில் வெப்ப அலை, தரமற்ற காற்று நிலவும்

கனடாவில் சீரற்ற வானிலை தொடர்பில் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வார இறுதியில் கனடாவின் பல மாகாணங்களிலும் பிரதேசங்களிலும் வெப்ப அலை, மோசமான காற்றுத் தரம் மற்றும் கடும் இடி மின்னல் தொடர்பான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களத்தினால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

191 வெப்ப மற்றும் மின்னலுக்கு தொடர்பான எச்சரிக்கைகள், 342 காற்றுத் தர எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

ஒன்டாரியோ, குவெபெக், ஆல்பர்டா, நியூஃபவுண்லாந்து மற்றும் லாப்ரடோர் ஆகிய மாகாணங்களில் வெப்ப எச்சரிக்கைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

ஆல்பர்டாவில், சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்களில் வெப்ப நிலை 30°C வரை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நியூஃபவுண்லாந்து மற்றும் லாப்ரடோரில், வெப்பம் 33°C வரை உயரும் எனவும், நீண்ட நாள் வெப்பமான மற்றும் வறண்ட காலநிலை தொடரும் எனவும் கூறப்பட்டுள்ளது.

தென் ஒன்டாரியோவில், வருகிற வாரம் முழுவதும் வெப்பம் மற்றும் ஈரப்பதம் அதிகமாகவே இருக்கும்.

உடல் வெப்பம் அதிகரித்தல், வியர்வை இல்லாத நிலை, மயக்கம், குழப்பம், உளறல் போன்றவை வெப்ப அலை காரணமாக ஏற்படும் ஆபத்தான அறிகுறிகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஒன்டாரியோவிலும் கியூபெக்கிலும் இடி மின்னலுக்கான கடுமையான எச்சரிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.



## மகிழ்ச்சியாக...

( C01 தொடர்ச்சி)


வந்துள்ளது.

இந்த ஆய்வில் மொத்தம் 39,841 கனடியர்கள் பங்கேற்றனர். அவர்களிடையே மகிழ்ச்சித் தரம் 100 இல் சராசரி 72.4 எனக் கணிக்கப்பட்டு, இது தேசிய சராசரி 68.7-ஐ விட சற்று உயர்ந்த அளவில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கியூபெக் - 72.4 புள்ளிகளையும், நியூப்ரன்ஸ்விக் - 70.2 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டு முன்னிலை வகிக்கின்றன.

அதற்கு அடுத்தபடியாக நியூஃபவுண்லாந்து - லாப்ரடோர், சாஸ்கட்சுவான், நோவா ஸ்கோஷியா மாகாணங்கள் காணப்படுகின்றன.

நகரங்களின் வரிசையில் மிஸிசாகா (ஒன்டாரியோ) உயர்ந்த மகிழ்ச்சித்தரத்துடன் முதலிடத்திலும், மொன்ட்ரியால் இரண்டாவது இடத்திலும், டொரோண்டோ கடைசி இடத்திலும் காணப்படுகின்றன.




# டொரொண்டோவில் துப்பாக்கிச் சூடு

டொரொண்டோ நகரில் உள்ள ரொஸ் லோர்ட் பூங்கா அருகே ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

ஞாயிறு காலை 6:10 மணியளவில், பின்ச் அவன்யூ மேற்கு Finch Avenue West மற்றும் டுப்ரெய்ன் வீதி Dufferin Street சந்திப்பில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், அங்கு ஓர் ஆண் காயமடைந்த நிலையில் இருப்பதைக் கண்டுள்ளனர்.

பின்னர் அவர் மருத்துவமனைக்கு அவசரமாக கொண்டு செல்லப்பட்டார்.

காயமடைந்த நபரின் காயம் கடுமையானது என்றாலும், உயிருக்கு ஆபத்தானது அல்ல என மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை சந்தேக நபர் குறித்து எந்தவொரு தகவலும் வெளியிடப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




## அஜாக்ஸில்...

( C01 தொடர்ச்சி)

கிடைத்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் தீயணைப்புத் துறையினரும் அந்த வீட்டில் தீப்பற்றியதை கண்டனர்.

தீயணைப்புப் படையினர் பலரை வீடிலிருந்து வெளியே அழைத்து பாதுகாப்பாக அவசரமாக அண்டை வீடுகளையும் இடம்பெயர்த்தனர்.

தீ அணைக்கப்பட்ட பின்னர், அந்த வீட்டுக்குள் ஒருவர் இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபரின் அடையாளம் இதுவரை வெளியாகவில்லை. தீ எப்படி ஏற்பட்டது, எதனால் ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டது என்பது தொடர்பான விவரங்கள் இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

சமப்வம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.